செய்தி வெளியீடு எண்: 478 நாள் : 10.09.2013

**பத்திரிக்கை செய்தி**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ்.பி.சண்முகநாதன் அவர்கள் விசாகப்பட்டினத்தில் அமைந்துள்ள கடற்கரை சாலையில் நிறுவப்பட்டுள்ள குருசுரா நீர்மூழ்கி கப்பல் அருங்காட்சியகத்தை பார்வையிட்டார்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சண்முகநாதன் மற்றும் சுற்றுலாத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ரா. கண்ணன் ஆகியோர்கள் 4.9.2013 (புதன்) அன்று விசாகப்பட்டினம் கடற்கரை சாலையில் நிறுவப்பட்டுள்ள குருசுரா நீர்மூழ்கி கப்பல் அருங்காட்சியகத்தை பார்வையிட்டார்கள். இந்த நிகழ்வு தமிழ்நாட்டில் மகாபலிபுரத்தில் அமையவுள்ள நீர் மூழ்கிக் கப்பல் அருங்காட்சியகம் அமைப்பதற்கு முன் அனுபவமாக அமையும்.

பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பழைய கப்பற்படை நீர்மூழ்கி கப்பல் வாக்லி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் பெறப்பட்டு அருங்காட்சியகமாக மாற்றப்படவுள்ளது என மாண்மிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்வு அருங்காட்சியகத்தை விரைவாகவும், நேர்த்தியாகவும் அமைப்பதற்கு அடிப்படையாக அமையும். இதன் பின்னர் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் மற்றும் முதன்மைச் செயலாளர் கடற்கரை சாலையில் அமைந்துள்ள தேசிய கடலாண்மை அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்கள்.

இந்திய கப்பற்படை அதிகாரி கமாண்டர் என். ராஜேஷ் மற்றும் காப்பாட்சியர் பனிராஜ் ஆகியோர்கள் குருசுரா நீர்மூழ்கி கப்பலின் வரலாற்றினையும் சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் எவ்வாறு கடற்கரையில் நிறுவப்பட்டது என்பது குறித்தும் விவரித்தார்கள்.

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அலுவலர்களுடனிருந்த விசாகப்பட்டின நகர மேம்பாட்டுக் கழக செயலாளர் திரு. ஜி.சி.கிஷோர் குமார் அவர்கள் விசாகப்பட்டினம் நகர மேம்பாட்டுக் கழகம் தனது அனுபவங்களை தமிழ்நாடு அரசுடன் பகிர்ந்துகொள்ளும் என தெரிவித்தார். விசாகப்பட்டினம் நகர மேம்பாட்டுக் கழகம் நீர்மூழ்கி அருங்காட்சியத்தை கிழக்கு கப்பற்படையின் தொழில் நுட்ப உதவியுடன் பராமரித்து வருகிறது.

கல்வாரி வகையை சார்ந்த இந்திய அருங்காட்சியக குருசுரா நீர்மூழ்கி கப்பல், 2001–ஆம் ஆண்டு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு இந்திய கப்பற்படை மற்றும் தேசிய கப்பல் வடிவமைப்பு ஆராய்ச்சி மைய கூட்டு முயற்சியுடன் கடற்கரையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகம் 2002–ஆம் ஆண்டு துவக்கப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9